பிற்பகல் 1–40

6. அறிவிப்பு

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, கருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள், மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவது போன்று, இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. இவற்றை சட்டமுன்வடிவு பிரிவு 2–லிருந்து இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.*

5. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும், வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)—*தொடர்ச்சி*

(ஆ) கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.*

**திரு. கே. பொன்னுசாமி:* *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெள்ளிய அறிவின் மேன்மை, தேர்ந்தவர் தலைவர் அம்மா, புள்ளியை மீறாதாரே புத்தவை தன்னில் வந்தார். பொதுப் பணம் வீணாகாது, புதுப் புதுத் திட்டம் தந்து, பூமிக்கு நன்மை செய்து, கதியிலா ஏழைக்கெல்லாம் கலங்கரை விளக்கம் ஆகி, அதிசயங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் அற்புதத் தாயே! நீங்கள் செய்யும் பணி எல்லாம் செந்தமிழர் வாழ்வதற்கே! மாண்புமிகு*